# மதுரை வடக்கு மாவட்டம் - ஒன்றிய - பகுதி - நகர பேரூர்க் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!

மதுரை வடக்கு மாவட்டம் ஒன்றிய/பகுதி/நகர/பேரூர் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

| நாள் / கிழமை | ஒன்றியம் / பகுதி/ நகரம்/ பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 31.08.2024/சனிக்கிழமை | கண்ணனேந்தல் | 10.00 PM | குறிஞ்சி மஹால், திருப்பாலை |
| 31.08.2024/சனிக்கிழமை | வாடிப்பட்டி வடக்கு, வாடிப்பட்டி பேரூர் | 11.00 AM | ஜான்சி மஹால், வாடிப்பட்டி |
| 31.08.2024/சனிக்கிழமை | வாடிப்பட்டி தெற்கு, சோழவந்தான் பேரூர் | 12.00AM | சந்திரன் பேலஸ், சோழவந்தான், (பழைய கனரா வங்கி) |
| 04.09.2024/புதன்கிழமை | ஆனையூர் | 09.00 AM | ஐஸ்வர்யா மஹால், கூடல்புதூர் |
| 04.09.2024/புதன்கிழமை | கொட்டாம்பட்டி தெற்கு | 10.30 AM | சுரேஷ் மஹால், மணப்பட்டி |
| 04.09.2024/புதன்கிழமை | கொட்டாம்பட்டி கிழக்கு | 11.30 AM | அழகிரி திருமண மண்டபம், கொட்டாம்பட்டி. |
| 04.09.2024/புதன்கிழமை | கொட்டாம்பட்டி மேற்கு | 12.30 AM | தெந்திலிங்கபுரம். |
| 04.09.2024/புதன்கிழமை | மேலூர் தெற்கு | 04.00 PM | வெற்றிச்செழியன் திருமண மண்டபம்,நயத்தான்பட்டிவிளக்கு. |
| 04.09.2024/புதன்கிழமை | மேலூர் கிழக்கு | 05.00 PM | ஸ்ரீவாரிமஹால்,நாவினிப்பட்டி(ஊ) |
| 04.09.2024/புதன்கிழமை | மேலூர் வடக்கு, அ.வல்லாளப்பட்டி பேரூர் | 06.00 PM | கண்ணன் மஹால், கல்லம்பட்டி |
| 04.09.2024/புதன்கிழமை | மேலூர் நகரம் | 07.00 PM | மூவேந்தர் பண்பாட்டுக் கழகம் மேலூர் |
| 06.09.2024/ வெள்ளிக்கிழமை | மதுரை மேற்கு | 10.00 AM | அமிர்தம் மஹால், பாசிங்காபுரம் |
| 06.09.2024/ வெள்ளிக்கிழமை | மதுரை மேற்கு வடக்கு | 04.01 PM | குறிஞ்சி மஹால், திருப்பாலை |
| 06.09.2024/ வெள்ளிக்கிழமை | திருப்பாலை | 05.00 PM | கணபதி மஹால், திருப்பாலை |
| 06.09.2024/ வெள்ளிக்கிழமை | மதுரை கிழக்கு | 06.00 PM | A.P. வளையாபதி மஹால், திருமோகூர் |
| 06.09.2024/ வெள்ளிக்கிழமை | கிழக்கு தெற்கு | 07.00 PM | தேவி பேலஸ், காளிகாப்பான் |
| 06.09.2024/ வெள்ளிக்கிழமை | வண்டியூர் | 08.00 PM | தங்கச்சாமி அம்பலம் திருமண மஹால், வண்டியூர். |
| 07.09.2024/சனிக்கிழமை | அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் பேரூர் | 10.30 AM | சுபிக்ஷாமஹால்,அலங்காநல்லூர் |
| 07.09.2024/சனிக்கிழமை | அலங்காநல்லூர் மேற்கு, பாலமேடு பேரூர் | 11.30 AM | GRK மஹால், அலங்காநல்லூர். |
| 07.09.2024/சனிக்கிழமை | மதுரை கிழக்கு வடக்கு | 12.30 PM | KAS மஹால், கள்ளந்திரி |

**அமைச்சர் பி.மூர்த்தி**
செயலாளர்
மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.08.2024) சென்னையில், உடல் நலக்குறைவால் காலமான செய்தி – மக்கள் தொடர்புத் துறையில் இணை இயக்குநராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இணை இயக்குநர் எல்.மணிமாறன் அவர்களின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

## வந்தே பாரத் ரயில்

# டி.ஆர்.பாலு எம்.பி.துவக்கி வைக்கிறார்!

## எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

*தாம்பரம், ஆக.31-*

*தாம்பரம் மாநகர கழகத்தினர் கவனத்திற்கு தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு :-*

*சென்னை எழும்பூர் நாகர்கோவில் மற்றும் மதுரை பெங்களூர் கண்டோன்மென்ட் இடையே வந்தே பாரத் ரயில் சேவையை இன்று (31.08.2024 - சனிக்கிழமை) பிற்பகல் 12:30 மணியளவில் காணொளி காட்சியின் மூலமாக நடைபெறும்.*

*இன்நிகழ்ச்சியினை தாம்பரம் ரயில் நிலையத்தில் கழக பொருளாளர் - பாராளுமன்ற கழக குழுத்தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு கொடியசைத்து துவக்கி வைக்க உள்ளார்.*

*இதில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா ஆகிய நானும் மற்ற முக்கிய தலைவர்களும் கலந்து கொள்ள உள்ளதால் இன்நிகழ்ச்சியில் மாநகர நிர்வாகிகளும், உள்ளாட்சி பிரிதிநிதிகளும், கழக அணிகளின் அமைப்பாளர்களும், துணை அமைப்பார்களும், வட்ட கழக செயலாளர்களும், கழக நிர்வாகிகளும், கழக தோழர்களும் பெரும் திரளாக பகல் 12 மணியளவில் தாம்பரம் ரயில் நிலையத்தில் நிகழ்ச்சி நடக்கும் நடைமேடைக்கு வருகை தந்திட மாநகரத்தில் உள்ள கழகத்தினரை அழைக்கிறேன்.*

*இவ்வாறு எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனை வழங்குகிறார்!

# எழும்பூர் வடக்கு பகுதிக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் சொ.வேலு அறிவிப்பு

*சென்னை ஆக:31*

*எழும்பூர் வடக்கு பகுதிக் கழக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது. இதில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார். இது குறித்து பகுதி செயலாளர் சொ.வேலு விடுத்துள்ள அறிக்கை வருமாறு;*

*சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதிக் கழக செயல் வீரர்கள் கூட்டம் நாளை 1. 9. 2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10:30 மணி அளவில் லட்சுமி மஹால் ( ராகவா தெரு கேட் ) நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்,இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.*

*ஆகையால் இக்கூட்டத்தில் எழும்பூர் வடக்கு பகுதிக்குட்பட்ட மாவட்ட,பகுதி நிர்வாகிகள்,மாமன்ற உறுப்பினர்கள்,வட்ட கழகச் செயலாளர்கள்,வட்ட நிர்வாகிகள்,அனைத்து அணி நிர்வாகிகள், பாகமுகவர்கள் (BLA2), மூத்த முன்னோடிகள், கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

*இவ்வாறு எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*




மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் மருத்துவர் திருமதி.பூங்கோதை ஆலடி அருணா ஏற்பாட்டில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் பதின்பருவ மகளிர் சூழலியல் விழிப்புணர்வு, விடாய்கால மறுபயனீடு பெட்டகம் வழங்குதல் நிகழ்ச்சி சென்னை இராயபுரம் தனலட்சுமி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இந்நிலையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர்.கலாநிதி வீராசாமி, மாவட்ட கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி, பகுதி கழகச் செயலாளர்கள் இரா.செந்தில்குமார், திருவ.பெ.சுரேஷ், கழக சுற்றுச்சூழல் அணியின் மாநில செயலாளர்கள் மருத்துவர் சஃபி சுலைமான், சாய் ஜெயகாந்த் பாரதி கலந்து கொண்டு மாணவிகளுக்கு பரிசு பொருள் வழங்கினர்.

## மயிலாடுதுறை தரங்கம்பாடி வீரட்டேஸ்வரர் திருக்கோவில் உள்பட

# 2000 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு விழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஆக.31

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின் இந்து சமய அறநிலையத்துறையின் 2,000-வது குடமுழுக்காக நேற்று (30.08.2024) நடைபெற்ற தருமபுர ஆதீனம் நிர்வாகத்திற்குட்பட்ட மயிலாடு துறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், பரசலூர், வீரட்டேஸ்வரர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு பெருவிழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தவத்திரு ஆதீன பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்து சமய அறநிலையத்துறை, தனது ஆளுகைக்குட்பட்ட தொன்மை வாய்ந்த திருக்கோயில்களில் பழமை மாறாமல் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்கு நடத்துதல், திருக்குளங்கள் மற்றும் திருத்தேர் சீரமைத்தல், ஆக்கிர மிப்பாளர்க ளிடமிருந்து திருக்கோயில் சொத்துக்களை மீட்டெடுத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் வருவாய் இனங்களை பெருக்குதல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது.



அந்த வகையில் நேற்றைய (29.08.2024) தினம் வரை இந்து சமய அறநிலை யத்துறையின் ஆளுகைக்குட்பட்ட 1,995 திருக்கோ யில்களில் திருக்குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இன்றைய தினம் நடைபெறும் 10 திருக்கோயில்களின் குடமுழுக்கையும் சேர்த்து அதன் எண்ணிக்கை 2,005 ஆக உயர்ந்துள்ளது.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின், இந்து சமய அறநிலையத்துறையில் 2000-மாவது குடமுழுக்காகவும், தருமபுர ஆதீனத்தின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில் 118-ஆவது குடமுழுக்காகவும் இன்று நடைபெற்ற பரசலூர் அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு நடந்தேறியிருக்கிறது. 1000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களை புனரமைத்து குடமுழுக்கு நடத்திட முதலமைச்சர் அவர்கள் இதுவரை ரூ. 300 கோடியை அரசு மானியமாக வழங்கி இருக்கின்றார்கள். அதோடு உபயதாரர் நிதியாக சுமார் ரூ.180 கோடி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிதியின் மூலம் இதுவரை ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட 36 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

இதற்கெல்லாம் காரணம் தமிழக முதல்வர் என்றாலும், இந்த குடமுழுக்கு களுக்கு, திருப்பணிகளுக்கு அதிகமான அளவிற்கு ஆதரவினை தந்து அனைத்து வகையிலும் உறுதுணையாக சன்னிதானங்கள் இருக்கின்றார்கள். 1,000-ஆவது குடமுழுக்கு கடந்தாண்டு செப்டம்பர் மாதத்திலும், 1,500-வது குடமுழுக்கு இந்த ஆண்டு மார்ச் மாதத்திலும் நடைபெற்றது. ஆறு மாத காலத்தில் 500-க்கும் மேற்பட்ட குடமுழுக்குகள் நடத்தப்பட்டு இன்றோடு 2005 குடமுழுக்குகள் நிறைவு பெற்றுள்ளன.

கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள ஆண்டுதோறும் தலா 1,000 என்ற எண்ணிக்கை 1,250 ஆகவும், நிதியுதவி தலா ரூ.1 லட்சம் என்பது ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டு இதுவரை 3,750 கிராமப்புற திருக்கோயில்களுக்கும் 3,750 ஆதிதிராவிடர்கள் பழங்குடி யினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு ரூ.150 கோடி திருப்பணி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிதியுதவி இந்த நிதியாண்டு முதல் ரூ. 2.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட உள்ளது.

அதேபோல ஒருகால பூசைத் திட்டத்திலும், திருக்கோயிலுக்கு வழங்கப்பட்ட வைப்புநிதித் தொகை ஒரு இலட்சத்திருந்து 2 இலட்சமாக உயர்த்தப்பட்டு. தற்போது 17,000 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. அதன் அர்ச்சகர் களுக்கு முதன்முறையாக மாதந்தோறும் ஊக்கத்தொகையாக ரூ.1.000 வழங்கப்பட்டு வருகிறது.

ஒருகால பூசைத் திட்ட திருகோயில்களின் அர்ச்சகர்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில 400 மாணவர்களுக்கு ரூ.10,000 கல்வி உதவித்தொகையாக கடந்த ஆண்டு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு அதனை 500 மாணவர்களுக்கு வழங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, திருகோயில் திருப்பணி மற்றும் குடமுழுக்கு களுக்கும், திருவிழாக்க ளுக்கும் அதிக அளவில் முக்கியத்துவம் தந்து சிறப்பான முறையில் நடத்தி வருவதோடு, பக்தர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றி தருவதனால் அனைத்து திருக்கோயில்களிலும் இறையன்பர்கள், பொதுமக்கள் நிறைவாக இறை தரிசனம் செய்கின்ற ஒரு நல்ல சூழ்நிலையை இந்து சமய அறநிலையத் துறை உருவாக்கி தந்துள்ளது. அதே நேரத்தில் தவத்திரு ஆதீன பெருமக்கள் ஒரு சேர இந்த ஆட்சியோடு இணக்கமாக இருந்து, பக்தி பரவசத்தோடு இந்த ஆட்சியை ஆதரிப்பதும், இது போன்ற குடமுழுக்கு விழாக்களில் பங்கேற்பதும் கடந்த காலங்களில் இல்லை. இந்த அருமையான அற்புத காட்சியால் இறைவனும் மகிழ்ச்சி அடைகிறான்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, தவத்திரு ஆதீன பெருமக்கள், இறையன்பர்கள் போற்றுகின்ற ஆன்மிக அரசாக திகழ்ந்து வருகிறது. அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டின் தீர்மானங்களை எல்லோரும் ஆதரிப்பார்கள் என்று எப்படி சொல்ல முடியும். இது ஜனநாயக நாடு அதன்படி கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். அதையும் நாங்கள் உள்வாங்கிக் கொள்கிறோம். அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு இவ்வளவு சீரோடு சிறப்போடு நடக்கும் என்று எண்ணிப் பார்க்கவில்லை. பலர் அவர்கள் வேறு வகையான கணக்கிலே இருந்தார்கள். அத்தனையையும் அடித்து சுக்கு நூறாக்கி முதலமைச்சர் அவர்களின் ஆதரவோடு உலகமே பாராட்டு கின்ற அளவிற்கு இந்த முருகன் மாநாடு நடைபெற்றிருக்கின்றது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி
### ஆகஸ்ட் 31 (2012)



**தென்பாண்டிச் சீமையில் கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடிகளில் ஒருவர்.**

**தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.**

**கமுதி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.**

**கமுதி ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும், கழகத்தின் சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். 'மிசா'வில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.**

**"அனைவரிடமும் அன்பு காட்டி, அயராது உழைத்து கழகத்தை வளர்த்தவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க.வே. செழியன்
### ஆகஸ்ட் 31 (2022)



**தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**1975ஆம் ஆண்டு தனது பகுதியில் உதயசூரியன் நற்பணி மன்றம் தொடங்கி, பின்னர் பெரியார் எழுச்சி மன்ற காப்பாளராகவும், பின்னர் வட்டக் கழகத்தில் பகுதி பிரதிநிதியாகவும் திருவல்லிக்கேணி பகுதி துணைச் செயலாளராகவும், பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து, அதனைத் தொடர்ந்து பகுதிக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றிவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**"திருவல்லிக்கேணியில் கழகம் வளர்த்த உண்மைத் தொடர்" என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**